**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 2430/ஆ5/2024, நாள்.18.06.2024**

.....

பொருள் பள்ளிக் கல்வி – மனநலம் மற்றும் வாழ்வியல் திறன் சார்ந்த பயிற்சி – இணையதளம் மூலம் மண்டல வாரியாக அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 9 – 12ம் வகுப்புகளை கையாளும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் வழங்குதல் – சார்பு

பார்வை

1. மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களின் சட்டபேரவை அறிவிப்புகள் 2023–2024 அறிவுப்பு எண். 16
2. பள்ளிக் கல்வித்துறைப் பயிற்சி அட்டவணை 2024–2025
3. சென்னை –6, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.4913/SCERT/E4/169 /2023, நாள்.18.06.2024

.....

பார்வை 1–ல் காணும் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களின் சட்டமன்றப் பேரவை அறிவிப்பு எண். 16–ல் "வளரிளம் பருவத்தினர் பெருந்தொற்றுக் காலத்தில் உளவியல் ரீதியாக பல்வேறு பிரச்சனைகளைச் சந்தித்துள்ளனர். அதனை ஈடுசெய்யும் வகையிலும், அவர்களின் சமூக மனவெழுச்சி நலனை மேம்படுத்தவும், நேர்மறை எண்ணங்களை உருவாக்கிடவும், மகிழ்ச்சியாகக் கற்றலில் ஈடுபடுவதற்கு ஏதுவாகவும், தமிழ்நாட்டிலுள்ள **அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 9 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு** மனநலம் மற்றும் வாழ்வியல் திறன் பயிற்சிகள் வழங்கப்படும்."

இது சார்ந்து 2022–23, 2023–24 கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 9–12 வகுப்புகளைக் கையாளும் ஆசிரியர்களுக்கும் அதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

தற்போது 2024–2025ஆம் கல்வியாண்டிற்கான மனநலம் மற்றும் வாழ்வியல் திறன் சார்ந்த பயிற்சி ஆசிரியர்களுக்கு 19.06.2024 முதல் 22.06.2024 வரை நான்கு நாட்கள் இணையதளம் மூலம் மண்டலவாரியாக வழங்கப்பட உள்ளது எனவும் இப்பயிற்சிக் கட்டகம் 20 முதல் 30 நிமிடங்களில் செய்திடத்தக்க வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. எனவே, ஆசிரியர்கள் மின்னுருவாக்கம் செய்யப்பட்ட பயிற்சிக் கட்டகங்களை பள்ளியில் உள்ள மடிக்கணினி, உயர்தொழில்நுட்ப ஆய்வகங்களில் உள்ள கணினிகள் மூலம் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நாட்களில் நிறைவு செய்ய வேண்டும். எனவே ஆசிரியர்கள் http://lms.tnsed.com/ என்ற இணையமுகவரியில் தங்களது EMIS ID, Password பயன்படுத்தி My Courses ல் சென்று மின்னுரு கட்டகங்களை முடித்தல் வேண்டும்.

ஆசிரியர்களுக்கான பயிற்சியைத் தொடர்ந்து மாணவர்களுக்கு உயர்தொழில்நுட்ப ஆய்வகம் மூலம் 24.06.2024 முதல் 28.06.2024 வரை வழங்கப்பட உள்ளது எனவும், மாணவர்களுக்கான மின்னுருவாக்கம் செய்யப்பட்ட கட்டகங்கள் ஒவ்வொன்றும் 20 நிமிடத்தில் செய்திடத்தக்க வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. எனவே, அனைத்து மாணவர்களும் 2024-2025 கல்வியாண்டு நாட்காட்டியில் குறிப்பிட்டுள்ளவாறு இச்செயல்பாடுகளை தவறாது மேற்கொள்ளவேண்டும். இப்பொருள் சார்பாக உரிய நடடிவக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு -

1. Zone Wise Details
2. கல்வியாண்டு வழிகாட்டி

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
தலைமையாசிரியர்கள்,
அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்

1. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்,
(இடைநிலைக் கல்வி)
வேலூர் மாவட்டம். (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)